மாகாணக்கல்வித் திணைக்களம் - சப்பிரகமுவ – வாராந்த பாடசாலை

Week :- 12 th 10 th Jan - 16 th Jan 2021

பாடம் - தமிழ் மொழியும் இலக்கியமும்

தயாரிப்பு: திருமதி.G.சுகந்தி
கே/தெஹி/தெஹியோவிற்ற தமிழ் மகா வித்தியாலயம்

தரம் - 10

# வினாத் தொகுதி – 01

01. பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1. நித்திலப் புன்னகை சுடர் வீசிட.. இங்கு நித்திலம் என்பதன் ஒத்த கருத்து?

   i. முத்து ii. நிலா iii. முகம் iv. ஒளி

2. தெள் நீர்க் கயத்து சிறுமீன்.. கயம் என்பதன் ஒத்த கருத்து?

   i. குளம் ii. நீர் ஓடும் வாயக்கால் iii.கடல் iv. கிணறு

3. எள்துணையானும் இரவாது தான் ஈதல் எத்துணையும் ஆற்றல் இனிது.. இரத்தல் என்பதன் ஒத்த கருத்து?

   i. கொடுத்தல் ii. வாங்குதல் iii.அளித்தல் iv. மறுத்தல்

4. மாகமடங்கலும் மால்விடையும்.. மடங்கல் என்பதன் ஒத்த கருத்து?

   i. யானை ii. நெருப்பு iii.சிங்கம் iv. காளை

5. எழுந்த கொழுங்கனலென்ன எழுந்தார்.. கனல் என்பதன் ஒத்த கருத்து?

   i. நீர் ii. நெருப்பு iii.வானம் iv. மழை

6. பூத்தஜோதி வதனம் திருமப் மேல்.. வதனம் என்பதன் ஒத்த கருத்து?

   i. கண் ii. முகம் iii. நெற்றி iv. கூந்தல்

7. புல்லர் நல்லோரை அறியார்.. புல்லர் என்பதன் எதிர்க்கருத்து?

   i.அறிவில்லாதவர் ii.அறிவுடையவர் iii.குழப்பமானவர் iv.அறிமுகமில்லாத

8. நாவலர் அவர்களின் காசம் அவரக்ளுக்கு அனுகூலமாய் அமைந்தது. அனுகூலம் என்பதன் எதிர்க்கருத்து ?

   i. நன்மை ii. சாதகம் iii.பிரதிகூலம் iv.இன்னல்

9. மதியினில் புலை நாத்திகம் கூறுவர்.. நாத்திகன் என்பதன் எதிர்க்கருத்து

   i. ஆத்திகன் ii. அறிவில்லாதவன் iii.அறிவுடையோன் iv. கல்லாதவன்

10. நாயணையார் கேண்மை கெழீஇக் கொளல்.. கேண்மை என்பதன் எதிர்க்கருத்து

i. நட்பு ii.தோழமை iii.பகைமை iv. உறவு

11. பாணன் சீறி யாழை மீட்டினான்.. பாணன் என்பதன் எதிர்ப்பாற்ச் சொல்?

i. பாணி ii. பாணாள் iii. பாடினி iv. பாணித்தி

12. வேடன் காட்டில் வேட்டையாடினான். வேடன் என்பதன் எதிர்ப்பாற்ச்சொல்

i. வேடினி ii. வேடுவிச்சி iii.வேட்டி iv. வேட்டுவத்தினி

13. பிறிற்றோ தலைசிறந்த நிபுணன். நிபுணன் என்பதற்குரிய எதிரபாற்ச்சொல்

i. நிபுணை ii. நிபுணி iii.நிபுணச்சி iv. நிபுணாள்

14. அரக்கர் கோமான் இராவணன். கோமான் என்பதன் எதிர்பப்பாற்ச்சொல்

i. கோமாளி ii. கோமாள் iii.கோமாட்டி iv. கோமகள்

15. இராமபிரான் காட்டிற்கு சென்றான். பிரான் என்பதன் எதிர்பப்பாற் சொல்

i. பிராட்டி ii. பிரானி iii.பிரமானி iv. பிராட்டினி

16. பாரிய வழக்குகளுக்கும் அப்பலீகளுக்கும் அவரை நியமிபப்து வழக்கம். அப்பலீ என்பதற்கு நிகரான தமிழச் சொல்?

i. முறையீடு ii. தீர்பப்பு iii.மேன்முறையீடு iv. விளக்கம்

17. இப்பொழுது கிளைமைட் சரியில்லை.. கிளைமைட் என்பதற்குரிய தமிழ்ச்சொல்?

i. காலநிலை ii. வானிலை iii.சூழ்நிலை iv. வெளிச்சம்

18. அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட் நிதியமைச்சரால் சமர்பபிக்கப்பட்டது. பட்ஜெட் என்பதற்குரிய தமிழ் சொல்

i. முதலீடு ii. வருமான அறிக்கை iii.பாதீடு iv. நிதியறிக்கை

19. இன்று சூப்பர் மாக்கெட்டின் பயன்பாடு அதிகளவில் உள்ளது. சூப்பர் மாக்கெட் என்பதன் தமிழச்சொல் வடிவம்

i. அல்லங்காடி ii. சிறப்பு அங்காடி iii.பெரிய அங்காடி iv. பொருடசாலை

20. இப்போது மீடியாவின் செயற்பாடு சிறப்பாக உள்ளது. மீடியா என்பதற்குரிய தமிழ்ச் சொல்

i. புகைப்படம் ii. காணொளி iii.ஊடகம் iv. வலைத்தளம்

# வினாத் தொகுதி – 02

பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையினை எழுதுக.

01. அறிஞர் அவை என்பது போல மயிலுக்கு யாது?

…………………………………………………………………………………………………..

02. கரும்பு கொல்லை என்பது போல புகையிலைக்கு

…………………………………………………………………………………………………..

03. ஆடு மந்தை என்பது போல யானைக்கு?

…………………………………………………………………………………………………..

04. மரம் சோலை என்பது போல மலைக்கு?

…………………………………………………………………………………………………..

05. தென்னை தோப்பு என்பது போல தேயிலைக்கு?

…………………………………………………………………………………………………..

06. கற்றாளையின் உள்ளீடு எவ்வாறு அழைக்கப்படும்?

…………………………………………………………………………………………………

07. மாதுளையின் உள்ளீடு எவ்வாறு அழைக்கப்படும்?

…………………………………………………………………………………………………

08. ஆடு மேய்பப்வன் இடையன் என்றால் கப்பல் செலுத்துபவன்?

…………………………………………………………………………………………………

09. தேர் மற்றும் யானையை செலுத்துபவன் எவ்வாறு அழைக்கப்படுவான்?

…………………………………………………………………………………………………

10. விமானம் செலுத்துபவன் எவ்வாறு அழைக்கப்படுவான்?

…………………………………………………………………………………………………..

11. தட்டிக் கொடுத்தல் எனும் பொருளில் அமைந்த மரபுத்தொடர் ?

…………………………………………………………………………………………………

12. கண் திறத்தல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்?

…………………………………………………………………………………………………..

13. காது கொடுத்தல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்?

…………………………………………………………………………………………………

14. நாக்கு நீளுதல் எனும் பொருளில் அமைந்த மரபுத் தொடர்?

…………………………………………………………………………………………………

15. செவிசாய்த்தல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர் யாது?

…………………………………………………………………………………………………..

16. ஆயுள் முழுவதும் பிரமச்சரிய விரதம் காத்து வாழ்பவன் எவ்வாறு அழைக்கப்படுவான்?

…………………………………………………………………………………………………..

17. சொற்களுக்குரிய பொருளை அகரவரிசைப்படி திரட்டித் தரும் நூல் ?

…………………………………………………………………………………………………..

18. சொற்களுக்குரிய பொருளை செய்யுள் வடிவில் திரட்டித் தரும் நூல் ?

…………………………………………………………………………………………………

19. பிற்காலத் தேவைகளுக்காக பொருளை சேமித்து பாதுகாத்து வைப்பதை எவ்வாறு அழைப்பர்?

…………………………………………………………………………………………………..

20.சலஞ்சலம் எனும் ஆயிரம் சங்குகளுக்கு நடுவே உள்ள உயர் சாதிச் சங்கை எவ்வாறு அழைப்பர்?

…………………………………………………………………………………………………..

# வினாத் தொகுதி - 03

## சுருக்கமான விடை தருக.

a. தனிப்பாடல் என்றால் என்ன ?

b. புகழேந்திப் புலவர் பாடிய மூன்று பிறைகளும் எவை. ?

c. சீதக்காதியின் கொடைத்திறம் பற்றி பாடிய புலவர் யார். ?

d. நன்னூலாம் கடல் என்பது என்ன அணி. ?

e. தேன் உலர் செண்பக வாசம் வானுலகில் வெடிக்கும் என்பது என்ன ?

f. எது நல்ல சினிமா என்ற கட்டுரையின் ஆசிரியர் யார். ?

g. நாட்டார் பாடலுக்கு 3 உதாரணம் தருக

h. குகப்படலம் கூறும் ஐவீர் என்போர் யாவர். ?

i. திருக்குற்றால குறவஞ்சியைப் பாடியவர் யார். ?

j. சினிமா மொழி கொண்டுள்ள மூன்று அம்சஙக்ள் எவை ?